அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை: 22/99(XXXVII)

எனது இலக்கம்: EST-6/05/TPR/1011
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.12.18

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

அரசாங்க உத்தியோகத்தர்கள்/ மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள்/ நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள்

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2011.06.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/99 (XVIII) இனால் திருத்தியமைக்கப்பட்ட 1999.10.08 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/99 இன் 3:6 ஆம் உப பந்தி தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அதில், தீர்வை வரி சலுகையுடன் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் தொடர்பாக உரித்துடமை கோருவது தொடர்பான இல. (IV) மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையை பின்வருமாறு திருத்தியமைத்து அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/99 ஐ திருத்தியமைப்பதற்கு 2017.02.07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3:6 (IV) I ஆந் தரத்தைச் சேர்ந்த அரச வைத்திய அலுவலர் அல்லது I ஆந் தரத்தைச் சேர்ந்த அரச பல் வைத்தியர் எனின், கட்டாய ஓய்வூதிய வயதை அடைவதை அடிப்படையாக கொண்டு சேவையில் இருந்து ஓய்வுபெற செய்வதற்கும், அரச நிபுணத்துவ வைத்திய அலுவலர் அல்லது அரச நிபுணத்துவ பல் வைத்திய அலுவலர் எனின் 60 வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் கட்டாயம் ஓய்வுபெறச் செய்யும் வயதான 63 வயது பூர்த்தியடையும் வரையான காலத்தில் எச்சந்தர்ப்பத்திலும் ஓய்வுபெறச் செய்தல்.

03. இவ் ஏற்பாடுகள் 2017.02.07 ஆந் திகதியில் இருந்து வலுவானதாகவிருக்கும்.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு